# காரையால் கரை அமைத்திருக்கும் ஈரோடு காரை வாய்க்கால்

இப்படியும் இருந்தது ஈரோடு

கால்வாய் அடியிலும், இரண்டு பக்க சுவர்களிலும் காரை பூசினால் தண்ணீர் உறிஞ்சப்படுவது தடுக்கப்படும். நீர் சேமிக்கப்படும் என்பது தற்கால வேளாண்மை உத்தியாகும். பரம்பிக்குளம் ஆழியாறு, கீழ்பவானி வாய்க்கால்களில் பல இடங்களில் இம்முறை இன்று கையாளப்படுகிறது.

இந்த முறையை வேளாள புராணம் பாடிய கந்தசாமி கவிநாயர் மிகவும் சிறப்பித்து கூறியுள்ளார். ஈரோட்டில் கிழக்கு எல்லையாக ஓடும் காளிங்கராயன் கால்வாயில் ஓரிடம் 'காரை வாய்க்கால்' என்று அழைக்கப்படுகிறது.

ஈரோட்டின் மையப்பகுதியில் ஓடும் பெரும்பள்ளம் காளிங்கராயன் வாய்க்கால் அருகில் ஒரு பாலம் அமைக்கப்பட்டு, காலிங்கராயன் வாய்க்காலுக்கு அடியில் ஓடுகிறது. இதை தனிப்பாடல் ஒன்று, 'அகாண்ட்மாய் வருகின்ற பெரும்பள்ளம் தன்னியே ஆறு போல் பெருகி வரவும், ஆறுக்கு ஆர் செவுதி நாலுக்கு நால் திரனை அதிலும் ஒரு பாலமாக' என்று கூறுகிறது.

பாலத்தின் கற்களின் இணைப்பிலும், காளிங்கராயன் வாய்க்காலின் கீழும் பக்க சுவர்களிலும் காரை பூசியுள்ளனர். இது எங்கும் இல்லாத தனி அமைப்பாகும். எல்லா இடங்களிலும் மண்ணால் கரை அமைத்திருப்பர். இங்கு காரையில் கரை அமைத்திருப்பது புதுமையாக இருப்பதால் இந்த பகுதியில் ஓடும் காளிங்கராயன் வாய்க்காலுக்கு காரை வாய்க்கால் என பெயரிட்டு மக்கள் அழைக்கின்றனர்.

